**தலைப்பு 103 - பாதுகாப்பு அமைச்சு**

**.....................................................**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**............................**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**.......................................................**

பாதுகாப்பு அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாதுகாப்பு அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**..........................................................................**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

**..............................................................................................................**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

……………………………………………………………………………………………………..

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக

கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**
**……………………………………………………………..……**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **பந்திக்கான தொடர்பு** | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ................ | ........................................... | ..................... |
| 2.1.3 (அ) | 01/2015 ஆம் இலக்க 2015 யூலை 20 ஆந் திகதிய அரசாங்க நிதிக்கொள்கை சுற்றறிக்கையின் (05) ஆம் பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 128(2)(ஐ) இல் காட்டப்படுகின்ற ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தேவையான சந்தர்ப்பத்தில் பொருளாதார நிலைமையின் மாற்றங்களை கவனத்தில் கொண்டு ஏதாவது சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் பொருத்தமான வகையில் திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் 1966 இன் 22 ஆம் இலக்க துவக்கு (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற துவக்கு அனுமதிப்பத்திரத்திரக் கட்டணத்தை பொருத்தமாக திருத்தம் செய்தல் மீளாய்வாண்டின் போதும் இடம்பெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டணத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**
**.....................................................**

**1.6.1 வருமானம் பெறுவனவுகள்**
**..........................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ................................. | ............................................ | ..................... |
| நிதிப்பிரமாணம் 128(2) (இ) மற்றும் 1/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக்கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமானக் கூற்றில் காட்டப்படுகின்ற நிலுவையாக | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை மீதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் தவறுதலாக 2018-12-31 இல் உள்ளவாறாகக் காணப்பட்ட நிலுவை மீதி இதற்காக | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற வழிகாட்டிகளின் பிரகாரம் கணக்கிணக்க கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| இருந்த அனுமதிப்பத்திர கட்டண வருமானத்திற்கும் நிதிக்கூற்றுக்களின் ACA-1(i) படிவத்தில் நிலுவையாக இருந்த வருமானத்திற்குமிடையே ரூபா 512,200 வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த அனுமதிப்பத்திர கட்டண வருமானம் ACA-1 (i) படிவத்தில் காட்டப்பட்டிருக்காமை இந்த வித்தியாசத்திற்கு காரணமாக இருந்தது. | சேர்த்துக்கொள்ளப்படவில்லை. எதிர்காலத்தில் முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவை மீதிகளையும் சேர்த்து இப்பெறுமதியைக் கணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 நிதியற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 103-01-01-2103 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் அமைச்சு அலுவலகம் இயந்திரங்களையும் உபகரணங்களையும் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 25,000,000 நிதி ஏற்பாட்டில் ரூபா 24,340,905 தொகை சனாதிபதி பாதுகாப்பு பிரிவிற்காக ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. இக்கொள்வனவுகள் அமைச்சின் பெறுகைத் திட்டத்திற்கோ அல்லது வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு செய்ததன் பின்னர் இந்த ஆயுதங்கள் இராணுவப் படைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உபகரணங்களை அமைச்சு சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதன் கீழ் காட்டியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் | இச்சொத்துக்களை 2021 ஆம் ஆண்டில் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளலாக சொத்துக்கள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அச்சொத்துக்களின் உரிமையாண்மையினை இலங்கை இராணுவப் படைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் அச்சொத்துக்களின் பெறுமதி இராணுவப் படையின் சொத்துக்கள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்ளடக்குவதற்குத் தேவையான தகவல்களை இலஙங்கை இராணுவப் படைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஏனைய செலவு விடயங்களுக்குரிய சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக அமைச்சின் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை மற்றும் நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் சரியாகக் காட்டப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்ட ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 24,340,905 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2020 ஆம் அண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிதியற்ற சொத்துக்களின் மீதி ரூபா 27,508,087,238 ஆக இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ஆரம்ப மீதி ரூபா 27,642,454,195 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீதியை முன்கொண்டு வரும் போது ரூபா 134,366,957 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டிற்கான செம்மையாக்கல்களை 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளல் இந்த அதிகரிப்புக்கு காரணமாக இருந்தது எனக் காட்டப்பட்டிருந்தும் ஆரம்ப மீதிக்கு மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல்கள் தொடர்பாக கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த அதிகரிப்பிற்கான செம்மையாக்கல்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காத துடன் எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது இவ்வாறான செம்மையாக்கல்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப மீதி சரியாக இருக்கவேண்டியதுடன் ஆரம்ப மீதிக்கு செய்யப்பட்ட செம்மையாக்கல்கள் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (இ) | திறைசேரி SA 82 ஆட்டவணைக்கு இணங்க 2021 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு காட்டப்படுகின்ற நிலையான சொத்துக்களின் ஆரம்ப மீதிக்கு ரூபா 20,324,727 தொகையான சொத்துக்கள் செம்மையாக்கப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற ஆரம்ப மீதிக்கு ரூபா 134,366,957 தொகையான சொத்துக்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 114,042,230 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் SA 82 அட்டவணையில் பதியப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்கள் ACA 6 படிவத்தினை தயாரிக்கும் போது தவறுதலாக ரூபா 101,460,000 ஆரம்ப மீதிக்கு உள்ளடக்கப்பட்டதனால் 2021 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியில் அதிகரிப்பு இடம்பெற்றிருந்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இணைய வழியினூடாக சொத்துக்கள் முகாமைத்துவ நிகழ்ச்சத் திட்டத்திற்க உள்ளடக்குவதற்கு வசதிகள் வழங்கப்படாதிருந்த ரூபா | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற மீதிகளை திறைசேரி மீதிகளுடன் ஒப்பீடு செய்து சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 12,586,987 பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்ததனால் 2021 இன் ஆரம்ப மீதியில் அதிகரித்தல் இடம்பெற்றிருந்தது. | |
| (ஈ) | நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றின் (ACA -6 படிவம்) பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியற்ற சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் பெறுமதி ரூபா 8,031,748,960 ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் திறைசேரி அச்சுப் பிரதிகள் மற்றும் நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 8,288,156,006 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 256,407,046 வித்தியாசம் உருவாகியிருந்தது. | இராணுவப் படையினால் 13-01-02-2104 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட ஒயாமடுவ வெடிபொருள் களஞ்சியத்திற்காக செலவு செய்யப்பட்ட எனினும் அமைச்சின் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படாத பெறுமதி ரூபா 269,521,433 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் மே மாத கணக்கு பொழிப்புக்களின் மூலம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>2020 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்ட எனினும் 2021 ஆம் ஆண்டின் போது சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு கொள்வனவாக உள்ளடக்கப்பட்ட பெறுமதி ரூபா 27,378,115 ஆகும். அதன் காரணமாக இப்பெறுமதி 2021 பேரேட்டிற்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதியினை விட அதிக பெறுமதியாகக் காட்டப்பட்டிருந்தது. ரூபா 14,263,728 தொகையான சொத்துக்கள் 2021 இல் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டதுடன் அப்பெறுமதியானது சொத்துக்கள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளடக்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | திறைசேரியின் SA 82 அட்டவணைக்கு இணங்க நிதியற்ற சொத்துக்களின் இறுதி மீதி ரூபா 37,724,115,329 ஆக இருந்ததுடன் ACA 6 படிவத்திற்கு இணங்க (நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்று) மீதி ரூபா 36,714,333,377 ஆகும். அதற்கிணங்க ரூபா 1,009,781,952 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | CIGAS நிகழ்ச்சித்திட்டத்தல் நிதியற்ற சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது ரூபா 1,009,781,952 தொகையான சொத்துக்கள் இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் 2022 யூன் மாத கணக்கு பொழிப்பின் மூலம் இந்நிலைமையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களின் மூலம் சரியான தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும். |

**1.6.3 நிதிச் சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் இரண்டு வங்கி கணக்குகளுக்கு நேரடி வைப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3,037,257 தொகை இனங்காணப்படாத வைப்பாகக் காட்டப்பட்டிருந்ததுடன் அந்த வைப்புக்கள் உறுதியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் மாதத்திற்கான வங்கி கணக்கிணக்க கூற்றில் ரூபா 2,946,346.90 தொகை இனங்காணப்படாத வைப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது. வெளித்தரப்பினர்களால் பல்வேறு சேவைகளை முன்னிட்டு வைப்புச் செய்யப்பட்ட பணத்தை இனங்கண்டு விரைவாக கணக்கீடு செய்வதற்கு குறித்த பிரிவுகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | இனங்காணப்படாத வைப்புக்களை தாமதமின்றி இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய கடெட் படையின் வங்கி கணக்கிற்குரிய கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறப்படாத வைப்புக்களின் கீழ் ரூபா 2,961,138 மீதியைக் காட்டி அதனை காசேட்டில் பிழையாக பதிந்து வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. அப்பிழையை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க காசேட்டில் | 2022 சனவரி மாத வங்கி கணக்கிணக்க கூற்றின் மூலம் இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வங்கி கணக்கிற்குரிய கணக்கிணக்க கூற்றினைத் தயாரித்து உரிய சரி செய்தல்கல் செய்யப்படல் வேண்டும். |

காட்டப்பட்ட மீதியானது வங்கிக் கூற்றில் காட்டப்பட்ட மீதியுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.6.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**
**.........................................................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **...............................................** | **.........................................** | **.......................** |
| அமைச்சின் பல்வேறு பிரிவுகளினால் பாவனைப் பொருட்கள்/களஞ்சியப் பொருட்களுக்கு விண்ணப்பித்து களஞ்சியத்திற்கு சமரப்பித்திருந்த 2021 ஒக்தோபர் மாதம் தொடர்பான பொருள் வேண்டுதல் பத்திர கோவை கணக்காய்வு பரீட்சிப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே அக்காலத்தில் வழங்கிய இருப்புக்கள் தொடர்பாக பரீட்சிக்க முடியாதிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் சனவரி 01 ஆந் திகதியிலிருந்து செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான காலத்தில் இருப்பேடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்த வழங்கல்கள் குறித்த மாதத்தில் மேற்கொண்ட அனைத்து வழங்கல்களினதும் கூட்டுத் தொகையாக பதியப்பட்டிருந்ததன் காரணமாக வழங்கல்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2021 ஒக்தோபர் மாதத்திற்குரிய பொருள் வேண்டுதல் பத்திரக் கோவையை களஞ்சிய பொறுப்பாளரினால் காணாமல் ஆக்கப்பட்டது என்பதனை களஞ்சிய பொறுப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் களஞ்சிய கட்டுப்பாட்டிற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை ஸ்தாபிப்பதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முறையான இருப்புக் கட்டுப்பாட்டு நடைமுறையினை பின்பற்றுதல் மற்றும் முறைப்படியாக மேற்பார்வையினை நடத்துதல் வேண்டும். |

**1.6.5 பதிவேடுனகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**
**....................................................................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **...............................................** | **.........................................** | **.......................** |
| அமைச்சினால் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,489,796 கிரயமான 6 வகையான பாவனைப் பொருட்கள் தொடர்பாக எதுவித இருப்பு பதிவேடும் பேணப்பட்டிருக்காததுடன் 143 வகையான டோனர்கள் மற்றும் 12 எழுது கருவி விடயங்கள் தொடர்பாக இருப்பேடு (பொது 198) பேணப்பட்டிருக்காமையின் காரணமாக | இருப்பேட்டினை முறையாகப் பேணி நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பாக உள்ளக பரிசீலனையும் இடம்பெற இருப்பதனால் அது தொடர்பாக வெளிப்படுகின்ற விடயங்களின் அடிப்படையில் களஞ்சிய பொறுப்பாளருக்கு எதிராக உரியசட்ட நடவடிக்கை | இருப்பேட்டினை முறையாகப் பேணி நாளதுவரையாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பௌதீக இருப்பு மீதியானது இருப்பேட்டின் பிரகாரம் காட்டப்படுகின்ற மீதியுடன் பொருத்தமான ஒப்பீட்டினைச் செய்யமுடியாதுள்ளது. | எடுக்கப்படும். | |

**2. நிதி மீளாய்வு**

........................

**2.1 வருமான முகாமைத்துவம்**

.......................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் ............................................. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் ....................................... | சிபாரிசுகள் ...................... |
|---|---|---|
| (அ) 20.03.06.00 ஆம் இலக்க வருமான குறியீட்டின் கீழ் ஐக்கிய நாடுளின் சமாதான செயற்பாடுகளிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐக்கிய குடியரசு டொலர் 9,954,775 நிலுவை வருமானம் காணப்பட்டதுடன் அதில் ஐக்கிய குடியரசு டொலர் 2,092,466 ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் நிலுவையாகக் காணப்பட்டது. | 2021-12-31 இல் உள்ளவாறான நிலுவை வருமானத்தில் ஐ.கு டொலர் 2,947,445 அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் நடாத்தப்படுகின்ற உபகரண பரீட்சிப்பின் போது உபகரணம் முறையாக செயற்படும் நிலையில் இல்லாததன் அடிப்படையில் வருமானத்தை கழித்தல்/பதிவழித்தல் இடம்பெற்றதனால் மதிப்பீடு செய்யப்பட்ட நிலுவை வருமானம் மாற்றமடைவதற்கு உட்பட்டுள்ளது என இலங்கை இராணுவ படையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை உரிய காலத்தில் அறவீடு செய்வதற்கு போதிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) வெடி பொருள் மற்றும் ஏனைய கட்டண வருமானத்தில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,920,650 தொகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 864,800 இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. | 2021-12-31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறான நிலுவை வருமானத்தை அறவீடு செய்யமுடியாத ஆயுதங்கள் அனுமதிப்பத்திரத்திற்காக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட செயலகத்திற்கு தெரியப்படுத்துவதற்கும் அது சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாக தகவல்களை விசாரணை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் இந்த நிலுவை வருமானங்களை அறவீடு | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யும் நிகழ்கால செயல்முன்னேற்றங்களை அமைச்சிற்கு அறிக்கையிடுவதற்கு அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. | |
| (இ) | வருமானக் குறியீடு 2003.06.00- ஐக்கிய நாடுகளின் சமாதான செயற்பாடுகள் வருமானம் தொடர்பாக அரசாங்க நிதி திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 4,208,140,000 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றின் ACA - I(ii) படிவத்தில் அப்பெறுமதி ரூபா 4,300,000,000 ஆகக் காட்டப்பட்டிருந்தது. இதனால் திருத்திய வருமான மதிப்பீட்டிற்கு நிதிக்கூற்றின் ACA -I (ii) படிவத்தில் காட்டப்பட்ட பெறுமதிக்கும் இடையே ரூபா 91,860,000 வித்தியாசம் உருவாகியிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 4,280,140,000 ஆக இருந்த போதிலும் பாதீட்டு திணைக்களத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபா 4,300,000,000 ஆக இருந்ததனால் நிதிக்கூற்றில் ACA-1(ii) படிவத்தின் திருத்திய வருமான மதிப்பீடாக அப்பணம் குறிப்பிடப்பட்டிருந்தது. | வருமான மதிப்பீட்டினை சரியாக தயாரித்தல் வேண்டும். |

**2.2 செலவு முகாமத்துவம்**

......................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | .............................................. | ...................................... | ...................... |
| (அ) | 19 மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 652,684,900 கூட்டுமொத்த நிதி எற்பாடும் 20 மீண்டு வரும் செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 217,599,602 கூட்டுமொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் நி.பி 66 இன் கீழ் ரூபா 113,987,000 தொகை ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்னர் இந்த மீண்டுவரும் செலவு விடயங்களின் சேமிப்பு காணப்பட்டது என மேலும் | கொவிட் 19 தொற்று நோய் நிலையின் கீழ் எதிர்பார்த்த செயற்பாடுகளை பூர்த்திசெய்ய முடியாமையால் செலவுகள் மட்டுப்படுத்தப்படல் இதற்கு காரணமாகும். | நிதிப்பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டினை முடியுமான அளவிற்கு முழுமையாகவும் சரியாகவும் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. இச்சேமிப்புக்களை ஒதுக்கீடு செய்யப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக எடுத்துக்கொள்கையில் 25 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | | |
| (ஆ) | மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 157,500,000 குறைநிரப்பு நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இன்னும் ஒரு மூலதனச் செலவு விடயத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 131,000,000 குறைநிரப்பு நிதி ஏற்பாட்டின் 86% அல்லது ரூபா 112,208,353 சேமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | தேவைப்பாட்டினை முறையாக இனங்கண்டு குறைநிரப்பு மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |
| (இ) | 22 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 17,450,000 கூட்டு மொத்த நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | அமைச்சு அலுவலகத்திற்காக தனியான பதவியணியினர் இணைத்துக் கொள்ளப்படவில்லை. | -மேற்படி- |
| (ஈ) | 02 மீண்டுவரும் செலவு விடயங்கள் தொடர்பான ரூபா 4,600,000 நிதி ஏற்பாடு முழுவதும் நி.பி 66 ஏற்பாட்டின் பிரகாரம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | செயற்பாட்டு குத்தகை வட்டிக் கொடுப்பனவு முடிவடைந்து தவணைப் பணம் மாத்திரம் செலுத்த வேண்டியிருந்ததுடன் அதற்கிணங்க தேவைப்பாடு உருவாகியிருக்கவில்லை. கொவிட் தொற்று நோய் நிலைமையை முன்னிட்டு வெளிநாட்டு கற்கை நெறிகளும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடைபெற்றிருக்காததனால் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தமுடியாதிருந்தது. திறைசேரியின் அங்கீகாரத்துடன் அத்தியவசியமான செலவுகளைத் தீர்த்துவைப்பதற்காக நி.பி 66 இன் மூலம் நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீடானது முடியுமான அளவுக்கு முழுமையாகவும் சரியாகவும் தயாரித்தல் வேண்டும். |
| (உ) | வருடாந்த பாதீட்டின் மூலம் மூன்று செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 18,000,000 நிதி ஏற்பாட்டினைப் போல இரண்டு மடங்கு கூடுதலான நிதிஏற்பாடு அல்லது ரூபா | 2021 ஆம் ஆண்டிற்காக போதியளவு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாத மூன்று செலவு விடயங்களுக்கான நிதி ஏற்பாடு சேமிக்கப்படும் என | நிதி ஏற்பாட்டினை மாற்றம் செய்யும் போது முறையான முகாமைத்துவத்துடன் செய்யப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| 42,078,000 தொகை நி.பி 66 இன் கீழ் ஏனைய செலவு விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்தது. | எதிர்பார்த்து செலவு விடயங்களிலிருந்து நி.பி இன் பிரகாரம் நிதி ஏற்பாட்டினை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

**2.3 நடைமுறைச் சாத்திமற்ற எல்லைகளை விதித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்காக 2021 பாதீட்டின் மூலம் விதிக்கப்பட்ட ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 223,000,000 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான வருமானம் ரூபா 79,227,522 ஆக இருந்ததனால் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை அடைந்து கொள்ளப்பட்டிருக்காததுடன் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லையை உள்ளபடியான வருமானத்துடன் ஒப்பீடு செய்தலானது நடைமுறைச் சாத்தியமற்றது என்பது அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டிற்காக அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 45 மில்லியன் எனக்காட்டப்பட்டிருந்தும் பாதீட்டு திணைக்களத்தின மூலம் இந்த எல்லையானது அகுமதிக்கப்பட்டுள்ளது. | நடைமுறைச் சாத்தியமான எல்லைகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற குறிப்பு இலக்கம் (iii) மற்றும் (iv) இன் பிரகாம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் மொத்த பெறுமதி ரூபா 2,287,685,069 ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் காட்டப்பட்ட பொறுப்புக்கள் ரூபா 1,218,883,761 ஆகும். அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களின் மூலம் காட்டப்படுகின்ற | ஆண்டின் இறுதியில் பாதுகாப்பு படையின் தலைமை அலுவலகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தில் காணப்பட்ட பொறுப்புக்களையும் முப்படைகளால் அமைச்சின் செலவுத் தலைப்பிற்கு உள்ளடக்கப்பட்ட பொறுப்புக்களையும் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திற்கு நாளதுவரையாக்கும் போது காணப்பட்ட தொழில்நுட்ப சிக்கலின் அடிப்படையில் முழுப் பெறுமதியில் சில தொகை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில் | திறைசேரியின் கணணி அச்சுப் பிரதியுடன் கணக்கிணக்கம் செய்து சரியான பெறுமதியைக் காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் அளவுக்கும் திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் காட்டப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் அளவுக்குமிடையே ரூபா 1,068,801,308 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | லை.<br><br>மேலே கூறிய தொழில்நுட்ப சிக்கலைத் தீர்த்துவைப்பதற்காக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் பதவியணியினருக்கு முறையான பயிற்சியினை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தாலே தவிர வேலை,சேவைகளை வழங்குவதற்காக எதுவித செலவுக்கோ அல்லது கடப்பட்டிற்கோ கடப்பாடு செய்யாதிருக்க வேண்டுமென காட்டப்பட்டிருந்ததுடன் 2017 ஏப்ரல் 22 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 2(ஈ) பந்தியின் பிரகாரம் ஏதாவது நிதி ஆண்டு தொடர்பான அனைத்து பொறுப்புக்களும் அந்த ஆண்டின் போதே பணத்தை செலுத்தி விடுவிக்கப்படுதல் வேண்டும். எந்த ஒரு பொறுப்பும் அடுத்து வரும் நிதி ஆண்டிற்குள் தீர்த்துவைக்கும் குறிக்கோளுடன் முன்கொண்டு செல்லாதிருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.<br>எவ்வாறாயினும் அமைச்சினால் வருடாந்த நிதி ஏற்பாட்டினை மிகைத்து 4 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 4,216,773 தொகையான பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | ஒதுக்கீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் செலவுகளை முகாமை செய்வதற்கும் பொறுப்புக்களை மேற்கொள்வதற்கும் உள்ள கடப்பாடுகள் தொடர்பாக உரிய விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் மற்றும் உரிய சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் கொடுப்பனவு வவுச்சர்கள் தொடர்பான தெரிவுப் பரீட்சிப்பின் போது 2021 ஆம் ஆண்டிற்கான ரூபா 8,590,715 மொத்த தொகையான செலவுகள் 2022 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டிலிருந்து செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் | பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புபட்ட சில நிறுவனங்களினால் பொறுப்புக்கள் அறிக்கை முறைப்படியாக நாளதுவரையாக சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாத பொறுப்புக்கள் பின்னர் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | பொறுப்புக்களை முறையாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |

| | |
|---|---|
| அச்செலவுகள் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 8,590,715 தொகையான பொறுப்புக்கள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இந்நிலைமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

2.5 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்கு விதிகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 384 மற்றும் 390 | நிதிப்பிரமாணத்தின் மூலம் காட்டப்படுகின்ற கட்டுப்பாட்டு நடைமுறை தொடர்பாக கவனம் செலுத்தி காசோலைகள் பயன்படுத்த வேண்டிய போதிலும் தேசி கடெட் படையினால, கவனயீனமாக காசோலைகள் பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இக்குறைபாடுகளை தவிர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 715(2) | அமைச்சின் பாவனைப் பொருள் களஞ்சியத்தினால் நிதிப்பிரமாணத்திற்கு முரணாக முறையான அங்கீகாரமின்றி | களஞ்சியம் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைக்குரிய மாற்றங்கள் | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொருட்கள் வழங்கியிருந்த சந்தர்ப்பங்களும் இருப்புக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் பின்பற்றாத சந்தர்ப்பங்களும் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | நிதிப்பிரமாணம் 715 (3) | களஞ்சிய உத்தியோகத்தர்களால் களஞ்சிய பொறுப்பாளர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், களஞ்சிய பொறுப்பாளர்களின் அறிக்கைகளில் பதிவேடுகளில் மற்றும் கணக்குகளில் சரிபிழை பார்த்தல் அல்லது அவர்களிடம் உள்ள இருப்புக்களில் சரிபிழை பார்த்தல் செய்யப்படவேண்டிய போதிலும் அமைச்சின் பாவனைப் பொருள் களஞ்சியம் மற்றும் தேசிய கடெட் படை தலைமை அலுவலக களஞ்சியம் சம்பந்தமாக அவ்வாறான மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை . | காணப்படுகின்ற வேலைப்பழுவின் அடிப்படையில் சில தவறுகள் இடம்பெற்றுள்ள போதிலும் இந்நிலைமையை தவிர்த்து முறையான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளக்கூடிய வகையில் மேற்பார்வை உத்தியோகத்தர்களின் கடமைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 30/2016 ஆம் இலக்க 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலப்பகுதி அல்லது ஓடுகின்ற கிலோ மீட்டர் எண்ணிக்கை அல்லது திருத்தம் செய்தலினை அடிப்படையாகக் கொண்டு எரிபொருள் நுகர்வு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதன் பின்னர் ஒவ்வொரு வாகனத்தின் எரிபொருள் பாவனை தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய படிவத்தின் அடிப்படையில் குறிப்புக்கள் பேணப்பட வேண்டிய போதிலும் | அமைச்சின் மோட்டார் வாகனங்களின் எரிபொருள் நுகர்வினைப் பரீட்சித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேசிய கடெட் படையின் அனைத்து மோட்டார் வாகனங்களினதும் எரிபொருள் நுகர்வினைப் பரீட்சிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. 36 வாகனங்கள் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ள | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமைச்சின் மற்றும் தேசிய காடெட் படையின் வாகனங்கள் சம்பந்தமாக அவ்வாறான எரிபொருள் பரீட்சிப்பு அல்லது ஏடுகளைப் பேணுதல் இடம்பெற்றிருக்கவில்லை. | ன. | |
| (இ) | 02/2017 ஆம் இலக்க 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | பதிவுசெய்தல் உரிமை இல்லாது பயன்படுத்துகின்ற வாகனங்களை பதிவு செய்கின்ற உரிமையுள்ள நிறுவனத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்து கொள்வதற்கு அல்லது பதிவு செய்யும் உரிமை உள்ள நிறுவனத்திற்கு முறைப்படியாக ஒப்படைப்பதற்கு அல்லது அதில் காட்டப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் மற்றும் தேசிய கடெட் படையினால் பயன்படுத்துகின்ற 36 வாகனங்கள் சம்பந்தமாக சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவு செய்யும் உரிமையைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.3 ஆம் பிரிவு | நுண் அலை ஒலிபரப்பு தொடர்பாடல் முறைமையினை வழங்கி ஸ்தாபித்தல் தொடர்பான பெறுகைக்காக வரைபு கேள்வி ஆவணங்களைப் பரீட்சிப்பதிலிருந்து பெறுகை குழுவினால் நிர்ணயிக்கும் கட்டம் வரை அங்கீகரிக்கப்பட்ட காலம் 147 நாட்களாக இருந்த போதிலும் அதற்காக 306 நாட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக | வரைபு கேள்வி ஆவணங்கள் தொழில்நுட்ப குழுவினால் 2021-02-16 ஆந் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன் அதனைப் பரீட்சிப்பதன் பின்னர் அடுத்துவரும் முதலாவது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவிற்கு | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| இப்பெறுகைக்காக 159 மேலதிக நாட்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | (SCAPC) 2021 மார்ச் மாதம் 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. |

**2.6 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்**

**........................................................**

லங்கி கணக்கு செயற்பாடுகள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** ............................................... | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** ......................................... | **சிபாரிசுகள்** ....................... |
|---|---|---|
| **(அ)** நிதிப்பிரமாணம் 395 (இ)இன் பிரகாரம் வங்கி கணக்கு உள்ள ஒவ்வொரு திணைக்களத்தினாலும் ஒவ்வொரு மாத இறுதியிலும் உள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமை சம்பந்தமாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கி கணக்கிணக்க கூற்றினை தயாரிக்க வேண்டிய போதிலும் தேசிய காடெட் படையின் தலைமையகத்தின் வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் நிர்ணயிக்கப்பட்டவாறு தயாரிக்கப்படவோ அல்லது சான்றுபடுத்தப்படவோ இல்லை. | தற்பொழுது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் காசேடுகளும் வவுச்சர்களும் மீண்டும் பரீட்சிக்கப்பட்டு வங்கி கணக்கிணக்க கூற்றுக்களை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) தேசிய கடெட்படையின் தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்ட ஆனால் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக கொடுப்பனவுக்குச் சமர்பிக்கப்படாத ரூபா 7,098,659 பெறுமதியான 53 காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமானம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் எதிர்காலத்தில் இடம் பெறாமைக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பாதுகாப்பு படை தலைமை அலவலகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு ரூபா 10,000 மில்லியனாக இருந்த போதிலும் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 08 முன்னணி கட்டங்களின் கீழ் ரூபா 17,848 மில்லியன் கிரயமான 404 செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இத்திட்டம் வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | உரிய பிரிவுகளிடமிருந்து இந்த அவதானிப்புக்கான விளக்கங்களைச் சமர்ப்பித்ததன் பின்னர் விரைவாக அது தொடர்பாக தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பாதீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டினை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.2 **செயற்திட்டங்களைய நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மெற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) பாதுகாப்பு படை தலைமை அலுவலகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் முன்னணி கட்டங்கள் 02 இலிருந்து 07 வரையுமான 275 ஒப்பந்த செயற்பாடுகளை மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த ஒப்பந்த செயற்பாடுகளில் 85 செயற்பாடுகள் எதுவித பௌதீக செயல் முன்னேற்றத்தையும் கொண்டிருக்காததுடன் 58 செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம் 1 சதவீதத்திற்கும் | உரிய பிரிவுகளினால் இந்த அவதானிப்புக்கான விளக்கங்களைச் சமர்ப்பித்ததன் பின்னர் விரைவாக அது தொடர்பாக தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திட்டமிட்டவாறு எதிர்பார்த்த செயலாற்றலினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 30 சதவீதத்திற்கும் இடைப்பட்ட குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | | |
| (ஆ) | தந்திரோபாய பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்பு செயற்திட்டத்தின் தொடக்க திட்டத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் நிர்மாணத்தை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் கால எல்லை 06 ஆண்டுகளால் நீடிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை காணப்பட்ட ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி செயல் முன்னேற்றம் முறையே 73 சதவீதம் 53சதவீதமாக காணப்பட்டதுடன் செயற்திட்டத்தை திட்டமிட்ட காலத்திற்குள் முடிவுறுத்தாமையின் காரணமாக அதன் மூலம் எதிர்பார்த்த ஆயுத சேவைகளுக்கிடையிலான ஒருங்கிணைந்த தந்திரோபாய வழியிலான தொடர்பாடலினைப் பேணும் தொடக்க குறிக்கோளினை காலத்துக்கு பொருத்தமாக நிறைவேற்றுவதற்கு இன்னும் தாமதமடைந்து காணப்பட்டது. | இச்செயற்திட்டம் 2014 இலிருந்து 2016 வரையான காலத்தில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும், கோபுரங்களை நிர்மாணித்தல் தாமதமடைந்தமை, நுண் அலை ஒலிபரப்பு முறைமையை ஸ்தாபித்தல் மற்றும் அமுல்ப்படுத்தும் கேள்வியினை மீண்டும் கோருவதற்கு ஏற்பட்டமையின் காரணமாக 2022-12-31 ஆந் திகதி வரை செயற்திட்ட காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (இ) | நுண் அலைகள் ஒலிபரப்பு தொடர்பாடல் முறைமையை கொள்வனவு செய்யும் பெறுகை செயற்பாடு 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பல சந்தர்ப்பங்களில் கோரப்பட்ட கேள்வி மனுக்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. 2021 சனவரி 11 ஆந் திகதி பெறுகை செயற்பாடு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அச்செயற்பாடும் பெறுகை மேன்முறையீட்டு குழு கட்டத்தில் காணப்பட்டது. இதற்கிணங்க இப்பெறுகைச் செயற்திட்டத்திற்காக 05 ஆண்டுகளை அண்மித்த காலம் எடுத்திருந்ததுடன் அது செயற்திட்டத்தின் தாமதம் தொடர்பாக நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | மீண்டும் கேள்வி கோருதலானது மேன்முறையீட்டு நடைமுறைக்கு தொடர்புடத்தப்பட்டிருந்ததனால் எதிர்பாராத வகையில் காலம் எடுத்திருந்தது. மேன்முறையீட்டு நடைமுறையினை அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகளை கட்டுப்படுத்தும் நடைமுறையினை பின்பற்ற வேண்டியிருந்தது. | திட்டமிட்டவாறு ஒப்பந்த செயற்பாடுகள் அமுல்ப்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) செயற்திட்டத்திற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 38.54 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்து ஸ்தாபிக்கப்பட்டிருந்த 22 மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் சமாந்தர செயற்பாடுகளின் தாமதத்தின் காரணமாக எதிர்பார்த்த குறிக்கோளுக்கு ஈடுபடுத்துவதற்கு முடியாது இரண்டு ஆண்டுகளை அண்மித்த காலமாக விளைவற்றுக் காணப்படமை அவதானிக்கப்பட்டது. மேலும் இச்செயற்திட்டத்திறகாக ரூபா 52.16 மில்லியன் செலவு செய்து 2020 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட்டிருந்த 11 தொடர்பாடல் கோபுரங்கள் மற்றும் அதனை தொடர்புபடுத்தும் துணைப்பாகங்கள் இன்னும் உரிய செயற்திட்டத்தின் குறிக்கோளுக்காக பயன்படுத்துதல் தாமதமடைந்து காணப்பட்டதுடன் கோபுரங்கள் பராமரிப்பிற்காக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைக்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 05 மில்லியன் செலவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | கோபுரங்களில் அனேகமானவை தற்பொழுது முப்படைகள், பொலிஸ் விசேட அதிரடிப்படைகள் என்பவற்றின் தொடர்பாடல் தேவைப்பாட்டிற்காக பயன்படுத்துவதுடன் சில கோபுரங்கள் நடமாடும் தொலைபேசி சேவைகளை வழங்குவதற்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டன. | திட்டமிட்டவாறு செயற்திட்டத்தை முடிவுறுத்தி எதிர்பார்த்த குறிக்கோள்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 பெறுகைகள்**

......................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ............................................ | ...................................... | ...................... |
| (அ) பெறுகை சழிகாட்டிக் கோவையின் 2.8.1 (அ) 7.7 மற்றும் 8.9.1 (ஆ) பந்திகளில் காட்டப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கு முரணாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது கணனிகளை கொள்வனவு செய்தல் மற்றும் ரூபா 500,000 பெறுமதியினை மிகைத்த பொருட்களை வழங்கும் ஒப்பந்தத்திற்காக | கணனியை கொள்வனவு செய்தல் அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டிற்கு இணங்க ஒரு அரசாங்க நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டது. வீட்டிலிருந்து கடமைகளை மேற்கொள்ளல், உணவுத் தட்டுப்பாடு மற்றும் பெறுகைக் கடமைகளுக்காக விரைவாக கொள்வனவு செய்ய வேண்டியிருந்ததனாலும் சந்தையில் கணனி மற்றும் | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கைகள் எழுதி கையொப்பமிடாமை போன்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டன என்பது தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | துணைக் கருவிகளுக்கு அதிகளவு பற்றாக்குறைகள் காணப்பட்டதனாலும் அப்பெறுகை மேற்கொள்ளப்பட்டது. தொற்றுநோய் நிலைமையின் கீழ் உத்தியோகத்தர்கள் வருகை மட்டுப்படுத்தப்பட்டதனால் ரூபா 500,000 இனை மிகைத்த ஒவ்வொரு பெறுகை சம்பந்தமாகவும் உடன்படிக்கை செய்து கொள்ளல் நடைமுறையில் சிக்கலானதாகும். கேள்வி மனுக்களைப் பெற்றுக்கொள்ளலும் ஒப்பந்தம் வழங்கும் கடிதமும் உடன்படிக்கை செய்து கடப்பாடு செய்யப்பட்டுள்ள ஒரு ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 01/2016 ஆம் இலக்க 2016 மார்ச் 17 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது அரசாங்க பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி போட்டி விலை மனுக்கள் கோரப்பட வேண்டியிருந்தும் 2018 மார்ச் 16 ஆந் திகதி 08 மோட்டார் வாகனங்களையும் 02 கெப் வாகனங்களையும் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக்கொள்வதற்காக கிடைத்த ஒரேயொரு கேள்வி மனுவின் அடிப்படையில் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அதற்கிணங்க அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்காக மேற்கொண்ட ரூபா 98,300,940 தொகையான இக்கொடுக்கல் வாங்கல்களுக்காக அரசாங்க பெறுகை நடைமுறைக்கு முரணாக எதிர்பார்த்த போட்டி விலைகளைப் பெற்றுக்கொள்ளாது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உரிய பிரிவிடமிருந்து இந்த அவதானிப்புகளுக்கான விளக்கங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் விரைவாக அது தொடர்பாக தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.11 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பிணையை இரத்துச் செய்ய முடியாததுடன் பெறுகை செய்யும் நிறுவனத்தினால் செய்யப்படுகின்ற முதன்மையான எழுத்துமூல வேண்டுதலின் அடிப்படையில் நிபந்தனை இல்லாது பணமாக மாற்றிக்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். எனினும் தேசிய கடெட் படை தலைமையகத்தின் 20 அச்சு இயந்திரங்களையும் 20 கணனி இயந்திரங்களையும் கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பிணையாக ரூபா 46,000 தொகையான காசோலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. கேள்விப் பிணையைச் சமர்ப்பிக்கும் தேவைப்பாட்டினை கேள்வி ஆவணங்களில் காட்டியிருக்கையில் அதனை சமர்ப்பிக்காமை பிரதான மீறலாகக் கருதி கேள்வியினை நிராகரிக்க வேண்டியிருந்த போதிலும் கேள்வியுடன் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 46,000 தொகையான காசோலையானது கேள்விப் பிணையாகக் கருதி அக்கேள்விதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | இந்த விலைகளைக் கோருவதற்கு இணங்க ஆகக் குறைந்த கேள்வியைச் சமர்ப்பித்த வழங்குனரின் கட்டளையை திறந்த சந்தர்ப்பத்தில் கேள்விப் பிணைக்குப் பதிலாக ரூபா 46,000 பெறுமதியினைக் கொண்ட காசோலை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இரண்டாவது விலை மனுவைச் சமர்ப்பித்த நிறுவனத்திடமிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்குமாயிருந்தால் ரூபா 1,043,500 தொகையான நட்டம் ஏற்படும் என்பதனாலும் தொற்று நோய் நிலையானது உச்சக் கட்டத்தில் காணப்பட்டதனாலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் பெறுகைக் குழுவினதும் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 46,000 தொகையான காசோலையை கேள்விப் பிணையாகக் கருதி 11 கணனிகளும் 08 அசசு இயந்திரங்களும் கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகை கால அட்டவணைக்கு இணங்கவும் கேள்வி செலலுபடியாகும் கால எல்லைக்குள்ளும் ஒப்பந்தத்தை வழங்குதல் இடம்பெற வேண்டியதுடன் அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில் கெள்வியின் செல்லுபடியாகும் காலத்தையும் நீடிக்க கேள்விப் பிணையின் அசல்லுபடியாகும் காலத்தையும் வேண்டியிருந்த போதிலும் நுண் அலைவரிசை ஒலிபரப்பு தொடர்பாடல் முறைமையை வழங்கி ஸ்தாபித்தல் தொடர்பான பெறுகையின் கேள்வி செல்லுபடியாகும் காலமும் | கேள்வியினதும் கேள்விப் பிணையினதும் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு 2022-04-24 ஆந் திகதி கேள்விதாரருக்கு தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க இரண்டு கேள்விதாரர்கள் கேள்வி செல்லுபடியாகும் காலத்தையும் கேள்விப் பிணையின் செல்லுபடியாகும் காலத்தினையும் நீடித்துள்ளதுடன் ஒரு கேள்வி தாரர் கேள்வி செலலுபடியாகும் காலத்தை மாத்திரம் நீடித்துள்ளார். ஒரு கேள்விதாரர் கெள்வியின் செல்லுபடியாகும் காலத்தைப் கேள்விப்பிணையின் செல்லுபடியாகும் காலத்தையும் நீடிப்பதற்கு மடியாது என தெரிவித்துள்ளார். | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கேள்விப் பிணையின் செல்லுபடியாகும் காலமும் செல்லுபடியற்றதாகக் காணப்பட்டிருந்தும் கால நீடிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**.......................................................**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **.............................................** | **.......................................** | **......................** |
| அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட டோனர் மற்றும் எழுது கருவிகளை உள்ளடக்கிய பாவனைப் பொருள் விடயங்களின் இருப்புக்களைப் பெற்றுக்கொள்ளல், இருப்பினை வழங்குதல் மற்றும் இருப்பு மீதி என்பவற்றை காட்டும் வகையில் இருப்பேடு முறைப்படியாக பேணப்படாமை மற்றும் சிறந்த மேற்பார்வை நடாத்தப்படாமையின் காரணமாக எந்தவொரு திகதியிலும் காணப்படுகின்ற புத்தக மீதியினையும் உள்ளபடியான மீதியினையும் பொருத்தமாக கணக்கிணக்கம் செய்வதற்கு உட்படுத்த முடியாதிருந்தது. அவ்வாறே பாவனைப் பொருட்களை வழங்கும் போது அது தொடர்பான கட்டுப்பாட்டு நடைமுறையினை பின்பற்றியிருக்காமை அல்லது கவனம் செலுத்தியிருக்காததன் காரணமாக மீளாய்வுக் காலத்தில் மேற்கொண்ட இருப்பு வழங்கலினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | மேலேயுள்ள 1.6 ஆம் அவதானிப்பிற்காக வழங்கப்பட்டுள்ள விளக்கமளித்தல்களில் காட்டப்பட்டுள்ளவாறு இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தயவாக தெரிவிக்கிறேன். | இருப்பேடுகளை முறைப்படியாக பேணுதல் வேண்டும். |

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

**...........................................................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **.............................................** | **.......................................** | **......................** |
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைப்பதற்கு தேவைப்படுகின்ற உத்தியோகத்தர்கள் சுயமாக கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுகின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு 612 ஆம் அத்தியாயமான அரசாங்க | பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணை ஆவணம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய | நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணைக் கட்டளைச் சட்டத்தின் நிபந்தனையை நாளதுவரையாக பேணாமை, அரசாங்க நிதி, பொருட்கள், ஆதனம் என்பன சம்பந்தமான பொறுப்புக்கள் வகிக்கும் மற்றும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் கவனயீனம்/ அலட்சியம்/ வேண்டுமென்றே செய்கின்ற மோசடிகள் முதலியவற்றின் ஒழுங்குவிதிகள் மற்றும் ஏனைய சுற்றறிக்கைகளை மீறுகின்ற உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதினால் மற்றும் அதற்கு இணங்க அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதினால் பிணைப் பதிவேடு தயாரிக்கப்படவில்லை. | |

**3.6 நட்டங்களும் சேதங்களும்.**

பின்வரும் அவதானிப்பக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ............................................. | ....................................... | ...................... |
| (அ) | 2014 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற தீப்பிடித்தலின் காரணமாக முப்படை தலைமை அலுவலக செயற்திட்டத்தின் ரூபா 12,312,766 பெறுமதியான சொத்துக்கள் நட்டமடைந்திருந்ததுடன் பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்தல் அல்லது பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் தாமதமடைந்து காணப்பட்டது. | பொலிஸ் அறிக்கையின் பிரகாரம் இச்சம்பவத்திற்கான காரணம் இனங்காணப்பட்டிருக்காததனால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருக்காததுடன் இதன் செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்படும் வரை நீதிமன்றத்தின் மூலம் வழக்கு மூடப்பட்டுள்ளது என தலைமை அலுவலக நிர்மாணச் செயற்திட்டத்தினால் தெரியப்படுத்தப்பட்டது. செயல்முன்னேற்ற மீளாய்வு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நட்டங்கள் சம்பந்தமாக முறைப்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது முப்படைகளின் தலைமை அலுவலக செயற்திட்டத்தின் ரூபா 1,959,660 பெறுமதியான மின்பிறப்பாக்கி இயந்திரம் தீப்பிடித்தமை தொடர்பாக விசாரணைச் சபை நியமிக்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட | இச்சம்பவம் தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு தொடக்க விசாரணை சபையின் அறிக்கை பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் அதனை 104(4) அறிக்கையுடன் அண்மையில் இந்த அமைச்சிற்கு | நிதிப்பிரமாணங் களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காலம் கடந்திருந்தும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நட்டம் இடம்பெற்று 3 மாதங்களுக்குள் தயாரிக்கப்பட வேண்டிய நி.பி 104(4)இன் படியான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் நட்டம் சம்பந்தமாக பொறுப்புக் கூற வேண்டிய நபரினை இனங்காணுதல் தாமதமடைந்து காணப்பட்டது. | சமர்ப்பிப்பதாக பணிப்பாளர், செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் தெரியப்படுத்தப்பட்டது. மேலும் இந்த மின் பிறப்பாக்கி இயந்திரத்தை திருத்தம் செய்யும் செலவினை மதிப்பீடு செய்வதற்காக கொள்வனவு செய்த நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. | |

### 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

..........................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| .............................................. | ....................................... | ...................... |
| பாதுகாப்பு தலைமை அலுவலகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் தாமதித்தல் மற்றும் நாணயக் கடிதத்தை திறப்பதில் தாமதம் முதலிய காரணத்தால் எதிர்பார்த்த காலத்தினுள் ஒப்பந்தத்தை பூர்த்திசெய்வதற்கு முடியாததன் அடிப்படையில் ஒப்பந்த கால எல்லையை நீடிக்கவேண்டி ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவ்வாறான 05 வழங்கல் ஒப்பந்தக்காரர்களால் ரூபா 1,126,141,457 மற்றும் ஐக்கிய குடியரசு டொலர் 1,606,201 தொகையான கால நீடிப்புச் செய்யும் 24 உரிமை கோரல்கள் (Claim fo EOT) வேண்டப்பட்டிருந்தன. | போதியளவு நிதி ஏற்பாடு வழங்கப்படாமை, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நாணயக் கடிதங்களுக்காக திறைசேரியின் அங்கீகாரம் தாமதமடைந்து கிடைத்தமை, பெறுகைக்கான அமைச்சரவை அங்கீகாரம் தாமதமடைந்தமை, விலை மனுக்களை மீண்டும் கோருவதற்கு தீர்மானித்தமை முதலிய விடயங்களின் காரணமாக செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றமும் தாமதமடைந்தது.<br><br>மேற்கூறிய விடயங்களின் காரணமாக வெளி ஒப்பந்தக்காரர்களின் செயற்பாடுகளினையும் சேவைகளையும் எதிர்பார்த்த காலத்திற்குள் பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தது. எனவே காலநீடிப்பினை வழங்க வேண்டி இருந்ததுடன் மேலதிக செலவுகளை மீளளிப்புச் செய்வதற்காக காலநீடிப்புச் செய்யும் உரிமை வேண்டப்பட்டிருந்தது. இந்த உரிமை கோரலினை மீண்டும் மீளாய்வு செய்வதற்காக பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய பணியகத்திற்கு (CECB) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

## 4 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சில் 79 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதில் 16 பதவிகள் சிரேஷ்ட பட்டத்திலான பதவிகளாகும். சிரேஷ்ட மட்டத்தின் ஒரு பதவி மற்றும் 44 அபிவிருத்தி உத்தியோத்தர் பதவிகள் மிகையாகக் காணப்பட்டன. | சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரசாங்க சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கும், ஒன்றிணைந்த சேவை பதவி வெற்றிடங்கள் தொடர்பாக ஒன்றிணைந்த சேவைகள் நாயகத்திற்கும் வேண்டிக்கொள்ளப்பட்டது. அமைச்சிற்கு பயிற்சிக்கு அனுப்பிவைக்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக அமைச்சிற்கு இணைத்துக்கொண்டதன் காரணமாக மிகைகள் காட்டப்பட்டிருந்தும் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். | போதியளவான பதவியணி மாத்திரம் பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | தேசிய கடெட் படையணியில் 68 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர் ஆகிய பதவி வெற்றிடங்களின் காரணமாக நிதிக் கட்டுப்பாடுகளையும் நிறுவனத்தின் நிருவாக செயற்பாடுகளையும் ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவது தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. | தேசிய கடெட் படையணிக்கு அங்கீகரித்த சிரேஷ்ட மட்டத்திலுள்ள கணக்காளர் மற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களின் 02 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. இப்பதவிகளுக்காக தற்காலிகமாக இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் மூலம் கடமைகள் ஈடுசெய்யப்படுகின்றன. மூன்றாம் மட்டத்திலுள்ள நிருவாக உத்தியோகத்தர் மற்றும் கண்காணிப்பு உத்தியொகத்தர்களின் 3 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | போதியளவு பதவியணியினை பேணுதல் வேண்டும். |